IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE,
GUDIYATHAM, VELLORE DISTRICT.

C.C.NO.46/2020

DEPOSITION OF WITNESS P.W.3

| | | |
|---|---|---|
| NAME | : | MURALI |
| FATHER'S NAME | : | KANDHAN |
| VILLAGE | : | PARADHARAMI |
| OCCUPATION | : | ELECTRICIAN |
| AGE | : | 45 |

Solemnly affirmed in accordance with the provisions of Section 3 and 4 of the Indian Oaths Act 1969, r/w rule 35 and 36 of Criminal Rules of Practice 2019 of the 6th day of October 2025.

**சாட்சிக்கு நீதிமன்ற ஊழியரால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் பதிவு செய்யப்படுகிறது.**

எதிரிகள் ஆஜர் இல்லை. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை:**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து எலக்ட்ரிசியன் வேலை செய்து வருகிறேன். தேதி, மாதம், வருடம் ஞாபகமில்லை, சுமார் 7 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் நான் வேலைக்கு செல்லும்போது பழனி என்பவரது வீட்டின் அருகே சென்றபோது போலீசார் கேட்டுக்கொண்டதற்கிணங்க கையொப்பம் செய்தேன். தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையது ஆகும். அந்த கையொப்பம் மட்டும் அ.சா.ஆ.2 ஆக குறியிடப்படுகிறது. இந்த வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது. இவ்வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**சாட்சியை பிறழ் சாட்சியாக கருதி அரசுத்தரப்பில் சாட்சியை குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதி வழங்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் போலிஸ் விசாரணையில் கடந்த 30.08.2018ஆம் தேதி மாலை 06.00 மணிக்கு நானும், தமிழ்செல்வன் என்பவரும் சம்பவ இடத்தில் இருவரும் இருந்தபோது, பரதராமி காவல் நிலைய உதவி ஆய்வாளர் அன்றைய தினம் நடந்த சண்டை சம்பந்தமாக புலன் விசாரணை செய்ததாகவும், அங்கு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்ததகாவும், அந்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் சம்பவயிடத்தில் வைத்து கையெழுத்து செய்துவிட்டு, அதனை போலீசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதவராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை இல்லை**

**Sd/-R.Saranya.,**
**Judicial Magistrate,**
**Gudiyatham.**